வாங்குவதற்கான அனுமதியை அவர்களுக்கு நிச்சயமாக கொடுக்க வேண்டும். ஆகையினாலே இதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் தள்ளுபடி மானியத் தொகை எந்த சங்கத்திலே காலதாமதம் என்று குறிப்பிட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் 2.17 போன்ற நூல்கள் ஈரோடு மாவட்டத்திலே அதிகப்படியாக தேவைப்படுகிற காரணத்தினாலே அந்த நூலை அதிகமாக நெசவாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று சென்னிமலையிலே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'டபில்யூ யூனிட்' 2.17 ரகத்தை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு ஆலையை ஏற்படுத்தி இந்த நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் வெளியிட்டு இருக் கிறோம். அந்த ஆலை இயக்கப்படுகிற காலத்தில் தட்டுப் பாடு இல்லாமல் நூல்கள் வழங்க முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் 1990-91 ஆம் ஆண்டுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 5 ஆம் அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1990) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள் வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் கள்,